[1987 பிப்ரவரி 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறைந்த பெரியவர் அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் ஒத்திவைக்கப்பெறுகின்றன.

நாளை மறுநாள் (2–3–1987) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 11–11 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

1. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 29–9–1986 ஆம் நாளிட்ட 984 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

2. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 18–10–1986 ஆம் நாளிட்ட 1042 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

3. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு தமிழக அமைச்சர்கள் மற்றும் சட்டமன்றத் தலைவர்கள் (அரசு இல்லங்களுக்கு அறைகலன்கள் கொடுத்தல், ஏனைய வசதிகள் செய்து கொடுத்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொது (பணியாளரமைப்பு-I) துறையின் 21–7–1986 ஆம் நாளிட்ட 1408 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

4. சென்னை, இந்திய தொழில் மறு அமைப்புக் கழகத்தினை வங்கியாக அறிவிப்பது குறித்து கூட்டுறவுத் துறையின் 24–10–1986 ஆம் நாளிட்ட 693 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1957) 22(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

1987 பிப்ரவரி 28]

5. மைசூரில் நடைபெறும் தசரா பண்டிகையை முன்னிட்டு கர்நாடக மாநில போக்குவரத்துக் கழகத்திற்கு தற்காலிக அனுமதி வழங்குவது குறித்து உள் துறையின் 7–10–1986 ஆம் நாளிட்ட 2813 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

6. வறட்சிப் பகுதி திட்டத்தினை பாசனப் பகுதி திட்டமாக அறிவிப்பது குறித்து பொதுப் பணித்துறையின் 27–5–1985 ஆம் நாளிட்ட 795 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பாசன வேலைகள் (கண்ணி வாய்க்கால்கள் கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1959) 9(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

7. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 8–10–1986 ஆம் நாளிட்ட 1027 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

8. ராயல் பூடான் அரசினால் வெளியிடப்படும் பரிசுச் சீட்டுக்கு செலுத்தக்கூடிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 26–9–1986 ஆம் நாளிட்ட 966 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

9. திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொண்ட மதுரையைச் சேர்ந்த செயின்ட் பால் சுகாதார மையத்திற்குச் சொந்தமான TDY 5183 பதிவெண்ணுள்ள ஜீப் ஆம்புலென்ஸ் வண்டிக்கு சலுகை முறையில் வரி விதிப்பது மற்றும் TNY 6349 பதிவெண்ணுள்ள ஜீப்பிற்கு அளிக்கப்பட்டு வந்த சலுகை முறை வரிவிதிப்பினை ரத்து செய்வது குறித்து உள் துறையின் 27–9–1986 ஆம் நாளிட்ட 2717 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

10. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கிறித்துவ சமய வழிபாட்டு மது விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் 17–10–1986 ஆம் நாளிட்ட 1317 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937-ம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

[1987 பிப்ரவரி 28

11. சமையல் எண்ணெய்யல்லாத தயாரிப்புகளுக்கு சர்க்கரைப்பாகு கழிவு உபயோகப்படுத்துவதற்கான வரையறைகளை நீக்குவது குறித்து மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் 28–10–1986 ஆம் நாளிட்ட 1377 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

12. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது வளாகங்கள் (அனுமதியின்றி குடியிருப்போரை வெளியேற்றல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 7–5–1986 ஆம் நாளிட்ட 619 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு பொது வளாகங்கள் (அனுமதியின்று குடியிருப்போரை வெளியேற்றல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1976) 20(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

13. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 10–11–1986 ஆம் நாளிட்ட 1125 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

14. தர்மபுரி மாவட்டத்திலுள்ள தர்மபுரி மாவட்ட கூழ் உற்பத்தியாளர்கள் பணிம தொழில் கூட்டுறவுச் சங்கத்தினரால் தயாரிக்கப்படும் ஜவ்வரிசி மற்றும் மரவள்ளிக் கிழங்கு கூழிற்கு விதிக்கக்கூடிய வரிகளை குறைப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 30–10–1986 ஆம் நாளிட்ட 1112 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

15. ரூபாய் 2 இலட்சத்திற்கு மிகாத விற்பனை அளவுள்ள விற்பனையாளர்களை மதிப்பீடு செய்ய உதவி வணிகவரி அலுவலர்களுக்கு அதிகாரமளிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 17–11–1986 ஆம் நாளிட்ட 1158 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

1987 பிப்ரவரி 28]

16. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான பன்னிரெண்டாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது. (தமிழ், ஆங்கிலம்)]

17. தமிழ்நாடு மொபெட்ஸ் நிறுவனத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

18. தமிழ்நாடு மொபெட்ஸ் நிறுவனத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது. தமிழ், ஆங்கிலம்)]

19 தமிழ்நாடு மொபெட்ஸ் நிறுவனத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஏழாவது ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. (தமிழ், ஆங்கிலம்)]

20. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான மூன்றாம் ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

21. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர அறிக்கை. [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

1. 1987 ஆம் ஆண்டு பச்சையப்பன் அறக்கட்டளை (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 1/1987).

2. தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 2/1987)